சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

# மலேசியா சைவ சமயப் பேரவை நடத்தும்

# ஐந்தாம் ஆண்டு திருமுறைப் பெருவிழா – 2019

## பிரிவு 1 - வயது 5 முதல் 7 வரை

<u>பாடல் 1</u>

**தலம்: திருப்பல்லவனீச்சரம்** **திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது**
**பண்: பழம்பஞ்சுரம் (ஈரடி)** **தாளம்: எழுமைச்சாய்ப்பு**

பரசுபாணியர் பாடல்வீணையர் பட்டினத்துறை பல்லவனீச்சரத்து
அரசுபேணி நின்றார் இவர்தன்மை அறிவாரார். 3.112.1

**பாடலின் பொருள்:**

சிவபெருமான் மழுப்படையைக் கையில் ஏந்தியவர். வீணையில் பாட்டிசைப்பவர். காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் ஆட்சி புரிந்து அருள்புரிபவர். இவரது அருட் பண்பை ஒருவரும் அறியார்.

<u>பாடல் 2</u>

**தலம்: பொது** **திருநாவுக்கரசு நாயனார் அருளியது**
**பண்: இந்தளம்** **தாளம்: ஆதி**

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே. 4.18.1

**பாடலின் பொருள்:**

எம்பெருமானுடைய உள்ளத்தைப்போல உயர்ந்த கயிலை மலையும், அவர் சூடும் உயர்ந்த பிறையும் அவர் பிச்சை எடுக்குமாறு கையில் ஏந்திய மண்டையோடும், அவர் ஏறிவரும் காளையும் எண்ணிக்கையில் ஒன்றே, வேறு இல்லை.

**<u>பாடல் 3</u>**

**தலம்: திருவாரூர்** **நம்பிஆரூரர் அருளியது**
**பண்: புறநீர்மை** **தாளம்: ஆதி**

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தம்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்
கெந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே. 7.83.1

**பாடலின் பொருள்:**

பழவினைகள் வலிய வந்து சூழும் முன்னே, என் தந்தைக்கும் தலைவராய் உள்ள இறைவரை, அடியேன், இரவும் பகலும் திருவைந்தெழுத்தை ஓதியும் உள்ளத்தால் எண்ணியும், அழகிய திருவாரூர்ப் பெருமானை அடைவது எந்த நாளோ? அறியேன்.